## *DEPOSITION OF WITNESS*
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## CC No.451/2015

## PW: 6

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.கோபிநாத் | Taluk : | குத்தாலம் |
| Father's Name : | திரு. ரெங்கசாமி | Calling : | LW5 |
| Village : | கடலங்குடி | Age : | 47 |

Solemnly affirmed by Thiru.X.Gilbert Maria Julian, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 07th day of February 2026.

Signature of Witness.

(Accused Present. Assistant Public Public Prosecutor Grade I Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் தற்போது கும்பகோணத்தில் வசித்து வருகிறேன். நான் சந்திரசேகரபுரம் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் பொது மேலாளராக (பொறுப்பு) ஆக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கின் சம்பவ சமயத்தில் 2009 முதல் 2015 வரை சந்திரசேகரபுரம் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் காசாளர் (பொறுப்பு) ஆக பணிபுரிந்தேன். சந்திரசேகரபுரம் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் இருந்து 66 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் நடத்தும் நியாய விலை கடைகளுக்கு அத்தியாவசிய பொருட்களான அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம்பருப்பு, பாமாயில் போன்ற பொருட்களை கடன் அடிப்படையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் தான் கிருஷ்ணாபுரம்

தொடக்க வேளாண்மை கடன் சங்கத்திற்கும் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நாங்கள் விநியோகம் செய்யப்படும் பொருட்களுக்கு அந்தந்த கடன் சங்கங்களுக்கு கடன் பட்டியல் தயார் செய்து அனுப்பி விடுவோம். அந்தந்த கூட்டுறவு சங்கங்கள் கடன் பட்டியலின் அடிப்படையில் ரொக்கமாகவோ, காசோலையாகவோ பண்டக சாலைக்கு பணத்தை செலுத்துவர். அவ்வாறு செலுத்தும்பட்சத்தில் பணத்திற்கான ரசீதை வழங்குவோம். என்னை கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கடன் சங்கத்தின் வழக்கு சம்மந்தமாக தஞ்சாவூர் வணிக குற்ற புலனாய்வு பிரிவு போலீசார் விசாரித்தார்கள். 18.06.2012-ல் ரூ.2,00,000/-மும், 28.06.2012-ல் ரூ.2,00,000/-மும், 06.07.2012-ல் ரூ.2,00,000/-மும் 12.12.2012 ல் ரூ.1,00,000/-மும், 14.12.2012-ல் ரூ.60,000/-மும் கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கடன் சங்கத்திலிருந்து சந்திரசேகரபுரம் பண்டக சாலைக்கு ரொக்கமாக பணம் செலுத்தியுள்ளதாக தெரிவித்து என்னிடம் போலீசார் விசாரித்தார்கள்.

2) மேற்படி தேதியில் கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திலிருந்து சந்திரசேகரபுரம் பண்டக சாலைக்கு பணம் எதுவும் செலுத்தவில்லை என்று தெரிவித்தேன். அன்றைய தேதிகளில் எங்களது பண்டக சாலையில் பராமரிக்கப்படும் ஆவணங்களை சமர்ப்பித்தேன். சந்திரசேகரபுரம் பண்டக சாலையில் பராமரித்து வரும் காசாளர் குறிப்பேடு அந்தந்த தேதிகளில் வரவு-செலவு கணக்கினை எழுதி அன்றைய தினமே காசாளர் மற்றும் பொது மேலாளர் கையொப்பம் செய்வோம். என்னிடம் காண்பிக்கப்படும் 18.06.2012 தேதியிட்ட

சந்திரசேகரபுரம் கூட்டுறவு மொத்த பண்டக சாலை, கும்பகோணம் காசாளர் குறிப்பேடு பக்கம் 57-ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். காசாளர் குறிப்பேடு பக்கம் 56 மற்றும் 57 அ.சா.ஆ.13 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் 28.06.2012 தேதியிட்ட சந்திரசேகரபுரம் கூட்டுறவு மொத்த பண்டக சாலை, கும்பகோணம் காசாளர் குறிப்பேடு பக்கம் 76-ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். காசாளர் குறிப்பேடு பக்கம் 75 மற்றும் 76 அ.சா.ஆ.14 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் 06.07.2012 தேதியிட்ட சந்திரசேகரபுரம் கூட்டுறவு மொத்த பண்டக சாலை, கும்பகோணம் காசாளர் குறிப்பேடு பக்கம் 89-ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். காசாளர் குறிப்பேடு பக்கம் 88 மற்றும் 89 அ.சா.ஆ.15 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் 12.12.2012 தேதியிட்ட சந்திரசேகரபுரம் கூட்டுறவு மொத்த பண்டக சாலை, கும்பகோணம் காசாளர் குறிப்பேடு பக்கம் 149-ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். காசாளர் குறிப்பேடு பக்கம் 148 மற்றும் 149 அ.சா.ஆ.16 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் 14.12.2012 தேதியிட்ட சந்திரசேகரபுரம் கூட்டுறவு மொத்த பண்டக சாலை, கும்பகோணம் காசாளர் குறிப்பேடு பக்கம் 153-ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். காசாளர் குறிப்பேடு பக்கம் 152 மற்றும் 153 அ.சா.ஆ.17 ஆகும்.

3) என்னிடம் காண்பிக்கப்படும் 28.06.2012 தேதியிட்ட சந்திரசேகரபுரம் கூட்டுறவு பண்டக சாலையின் ரசீது எண்.054385 ல் உள்ள தனி அலுவலர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி ரசீதின் கார்பன் காப்பியில் S.புதூர்

தொடக்க வேளாண்மை கடன் சங்கத்திலிருந்து ரூபாய் ஒரு லட்சம் பெற்றுக் கொண்டதற்கான கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன். ரசீது எண்.054385 அ.சா.ஆ.18 ஆகும். நான் பணிபுரிந்த சமயத்தில் கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ஜோசப் மார்ட்டின் என்பவர் செயலாளர் (பொறுப்பு) ஆக இருந்தார். சந்திரசேகரபுரம் கூட்டுறவு பண்டக சாலையில் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள் பணம் அல்லது காசோலையை செலுத்துவார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

மனுவின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam*